

# கொள்ளைநோய் கொடூரம்!

## கொள்ளை நோய்க்கு எப்படித் தப்பலாம்?

பரவி வரும் கொள்ளைநோய் எதினால் ஏற்பட்டது?
இதற்குக் காரணம் யார்? மனிதரா? இயற்கையா?
இனி, இதன் விளைவுகள் எப்படியிருக்கும்?
அச்சுறுத்தி வரும் கொள்ளைநோய் பற்றிய
கேள்விகளுக்கான பதில்கள் பலவிதமாக இருந்தாலும்,
கர்த்தர் எச்சரிப்பாக முன்னறிவித்துச் சொல்லியிருக்கும்
கொள்ளைநோய் பற்றிய தீர்க்கதரிசன
வார்த்தைகள் மாத்திரமே உண்மை நிலவரத்தை
நமக்கு வெளிப்படுத்துவதோடு,கொள்ளைநோய்களின்
கொடூரங்களிலிருந்து நாம் தப்பவும்,தேசத்தைத் தப்புவிக்கவும்
வழி சொல்கிறது.

**கொள்ளைநோய் பற்றி கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசனங்களும், தப்பும் வழிகளும்**



# கொள்ளைநோய் கொடூரம்!

## கொள்ளைநோய் பற்றி கர்த்தர் உரைத்த வார்த்தைகள்

வெட்டுக்கிளிகள் அநேகம் தேசங்களின் மேல் பறக்கிற செய்திகளைக் கேட்கையில் நீங்கள் எச்சரிக்கைப்படுங்கள். அது துவக்கத்தில் இங்கொங்கொன்றும் அங்கொன்றுமாக சில தேசங்களின் மேல் பறக்கும். பின்பு இவைகளின் இலக்கம் பலுகிப் பெருகி அநேகம் தேசங்களில் வியாபிக்கும். அப்போது தேசங்களில் கொடிய வியாதிகளும், மனிதர்களை தீவிரித்துப் பட்சிக்கிற கொள்ளைநோய்களும் புறப்படும். இதினால் அநேகம் மனிதர்களின் மரணங்கள் உண்டாகும். ஜனங்கள் பீதியடைந்து இங்கும் அங்குமாய் சிதறி அலைவார்கள். நகரங்களிலும், கிராமங்களிலும் மனிதர்கள் கூட்டம் கூட்டமாகச் சாகிறதைப் பார்ப்பீர்கள். வீதிகளில் அவர்கள் பிரேதங்கள் விழுகிறதையும், மருந்துகள் அவர்களிடத்தில் செயல்படாதிருப்பதையும் காண்பீர்கள். இதின் தீவிரத்தினால் சாகிறவனைத் தொடவும், அவனை அடக்கம் செய்யவும் பயந்திருப்பார்கள். பிரேதங்கள் குழிகளில் திரளாகப் புதைக்கப்படும். திரளாக நெருப்பினால் தகனிக்கப்படும். அவைகளின் புகையினால் தேசங்கள் நிறைந்திருக்கும். காற்றில் தீமை பரவும். இதின் தீவிரமான மரணங்களினால் தேசங்கள் திகைப்படையும். ஒருவன் கால்நடைகளால் பரவிற்று, அவைகளை ஒழித்துப் போடுவோம் என்பான். மற்றவன் இது பறவைகளால் பரவிற்று அவைகளை வேட்டையாடுவோம் என்பான். இன்னொருவன் இவை சர்ப்பங்களால் பரவிற்று அவைகளைக் கொன்றொழிப்போம் என்பான். ஆயினும் இவைகள் மனிதர்களாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதை அறியாமலிருப்பார்கள். இவைகளுக்குக் காரணமானவர்களோ மௌனம் சாதிப்பார்கள். புறப்பட்டு வருகிற இந்த வியாதிகள் வெளிப்பார்வைக்கு இயற்கையாகவே எழும்பி வருகிறதைப் போலக் காணப்பட்டாலும், உண்மையில் இவை மனிதர்களால் உருவாக்கி விடப்பட்டவையே. தேசத்தில் குழப்பமான சூழ்நிலைகளை உருவாக்கவும், ஜனங்களின் வாழ்வாதாரங்களை பாதிப்பதினாலும், அவர்களை பயப்படுத்துவதினாலும் தாங்கள் தேசத்தில் செய்கிற பொல்லாத கிரியைகளை ஜனங்கள் கவனிக்கக் கூடாதபடிக்கு அவர்கள் பார்வையை திசை திருப்பவே இவை செய்யப்படுகின்றன. ஜனங்கள் இதைக் குறித்தே பேசுவார்கள். இதைக் குறித்தே கவலைப்படுவார்கள். அதினால் அவர்கள் தேசத்தில் செய்யப்படும் தீமைகளையும், அதைச் செய்கிறவர்களையும் கவனிக்க பெலனற்றுப் போவார்கள். தேசத்தின் மேல் செய்யப்படும் கொடுமையையும், தேசம் பொல்லாதவர்களால் கொள்ளை போவதையும் சிலர் கவனித்துச் சொன்னாலும் அதை ஒருவனும் கேட்கக் கூடாதபடிக்கு இந்த வியாதிகளினால் உண்டான பதட்டத்திலேயே கவனமாயிருப்பார்கள். தேசத்தின் மேல் வருகிற தீங்கைக் குறித்து மனஸ்தாபப்படுகிறவனும் இல்லை. அதற்காக உத்திரவாதம் பண்ணுகிறவனும் இல்லை என்பதினால் அல்லவோ தேசத்தின் தீமைகள் அவிப்பார் இல்லாத நெருப்பைப் போல பற்றிப் பிடிக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். இவை மனித ஞானத்தில் கட்டுப்படுகிறதில்லை. அவர்கள் அறிவு அதைச் சாதிக்கிறதும் இல்லை. என் நாமம் தரிக்கப்பட்டு, சாகிறவனுடைய மரணத்தை விரும்பாமல், அவைகளுக்காக பாரப்பட்டு திறப்பிலே நின்று உத்திரவாதம் பண்ணுகிறனுடைய கண்ணீரே இதற்குப் பரிகாரமும், இவைகளை அடக்கிப் போடுகிற ஆயுதமுமாம் என்றார்.
(உரைக்கப்பட்ட நாள்: 15.08.2015 இராமநாதபுரம்)





## சீனாவில் உண்டாகும் பயங்கரம்

இதோ, சின் தேசத்தின் மேலும் சோங்குவாவின் தேசத்தின் மேலும் தீமை வருகிறது. அது தேசத்தின் நம்பிக்கையை அற்றுப் போகப் பண்ணத்தக்கதாக பயங்கரமானதாயும், மனிதர்களைக் கொத்துக் கொத்தாக வேட்டையாடிக் கொன்றொழிக்கும் தீமையாயும் இருக்கிறது. தேசங்களைத் திகைப்பண்ணும் இந்தப் பயங்கரம் முந்தி *சின்* தேசத்திலும் பின்பு சிலகாலம் தாண்டி சோங்குவாவின் தேசத்திலிருந்தும் புறப்படும். இதின் வீரியத்தினால் திரளான மனிதர்கள் மரித்துப் போவார்கள். சின் தேசத்திலிருந்து புறப்படும் தீமையானது, அதின் குடிகள் விரவியிருக்கிற பெருவாரியான தேசங்களிலும் பலங்கொள்ளும். அப்போது ஜாதிகள் திகைத்து, ஜனங்கள் நடுங்குவார்கள். வீதிகளில் பிரேதங்கள் விழுகிறதையும், அலங்கங்களையும், தாழ்ப்பாள்களையும் அது மீறுகிறதையும் காண்பார்கள். புகையினால் அது மட்டுப்படாமலும், நெருப்பினால் அது அவியாமலும் இருக்கும். அதின் தாகமெல்லாம் மனிதரின் ஜீவனே. சின் தேசத்தின் மேலும், சோங்குவாவின் குடிகள் மேலும் எனக்கு வழக்கிருக்கிறது. சின் தேசம் தன் பலத்தை நம்பி, எங்கள் கையின் பிரயாசத்தினால் நாங்கள் கொழுத்தோம் என்றும், தேசங்களை நாங்கள் ஜெயிப்போம் என்றும் சொல்லுகிறது. அது என் ஜனங்களைப் பகைத்து, அவர்களின் வாழ்வாதாரங்களைப் பாழாக்கி அவர்கள் வழிபாட்டு ஆலயங்களை இடித்துப் போட்டது. சர்ப்பமானது எங்களைப் பெற்றது என்றும், சர்ப்பமானது எங்கள் தேவன் என்றும் சொல்லி, நன்மையைப் பகைத்து தீமையை விரும்பியது. சர்ப்பம் தன் நாவினால் அவர்களைத் தீண்டியதைப் போல தீமையானது அவர்களைத் தீண்டும். தாங்கள் வழிபட்டு வந்த சர்ப்பமே தங்களை விழுங்கியது என்பார்கள். அப்போது தேசத்தில் பற்றுகிற நெருப்பானது அதின் குடிகள் விரவியிருக்கிற தேசங்களில் எல்லாம் நுழைய எத்தனிக்கும். இதோ, தேசமானது தன் தவறுகளுக்காக தண்டிக்கப்படவும், அதற்கான விலைக்கிரயம் கொடுக்கவும் காத்திருக்கிறது. தீமை அதின் மேல் தீயை போலப் பற்றுகிறது. தேசங்களுக்குள் என்னை அறிந்திருக்கிற என் ஜனங்கள் இதற்காக உத்திரவாதம் செய்கையில் மாத்திரமே நான் அவைகளைக் கவனித்து பரவும் தீமைக்கு எல்லையை வைப்பேன். தான் வெட்டின குழியில் தானே விழுகிறதைப் போல மனிதர்கள் ஏற்படுத்தின தீமையே அவர்களை விழுங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். (வெளிப்படுத்தப்பட்ட நாள்: 08 அக்டோபர் 2016 இராமநாதபுரம்.)

## ஜெபியுங்கள்.. ஜெயம் பெறலாம்

1 சமீப நாட்களாக சீனாவிலிருந்து பரவி வரும் கொரோனா வைரஸ் கொள்ளைநோயானது உலகநாடுகள் அனைத்தையும் அச்சுறுத்தி வருகிறது. இதன் தாக்கம் மேலும் பரவாமல் தடை செய்யப்பட மன்றாடி ஜெபியுங்கள்.

2 நாள்தோறும் இதன் தாக்கத்தால் மரித்துப் போவோரின் எண்ணிக்கை சீனாவில் அதிகரித்து வருகிறது. கர்த்தர் சீன தேசத்துக்கு இரங்கும்படியாகவும், சீனாவின் அவலநிலையை மாற்றிப் போடும்படியாகவும் ஜெபியுங்கள்.

3 சீனாவை ஒட்டியுள்ள பிற தேசங்களிலும், குறிப்பாக சீனர்கள் அதிகம் வசிக்கும் தேசங்களிலும் இந்த நோய் பரவிவிடாதபடிக்கு மன்றாடி ஜெபியுங்கள்.

4 சீனாவின் பொருளாதாரம் இதனால் தீவிரமாக பாதிக்கப்பட்டு வருகிறது. பலதேசங்கள் சீனாவுடன் வியாபாரத் தொடர்பு வைத்துள்ளது. அந்த தேசங்கள் எல்லாம் பொருளாதாரத்திலும், வர்த்தகத்திலும் பாதிப்படைய வாய்ப்பிருக்கிறது. அந்நிலை ஏற்படாதபடி கர்த்தர் இரக்கம் செய்யும்படியாக ஜெபியுங்கள்.

5 மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இதுபோன்ற தீமையை விளைவிக்கும் விஞ்ஞானப் போராயுத உற்பத்தி உலக தேசங்களில் தடை செய்யப்படும்படியாக ஜெபியுங்கள்.

6 சீனாவின் அருகாமையிலுள்ள நாடு இந்தியா. இந்தியாவில் இந்தக் கொள்ளைநோய் பரவாதபடிக்கு கர்த்தர் நம் தேசத்தையும் பாதுகாத்துக் கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.

7 இந்தக் கொள்ளைநோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகளைக் கண்டுபிடிக்க உலக அளவில் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவிலேயே இந்த முயற்சிகள் வெற்றியடைய கர்த்தர் உதவிசெய்யும்படியாக ஜெபியுங்கள்.

இந்த தீர்க்கதரிசனம் குறித்து சகோ.மோகன் சி.லாசரஸ் மற்றும் சகோ.வின்சென்ட் செல்வகுமார் ஆகியோர் கலந்துகொண்டு பேசிய கலந்துரையாடல் நிகழ்ச்சியைக் காண அருகிலுள்ள QR Code ஐ SCAN செய்யவும்



கர்த்தர் வெளிப்படுத்திச் சொல்லியிருக்கும் இந்த அவசரகால தீர்க்கதரிசனங்களுக்காக நீங்கள் ஜெபிக்க விரும்பினாலோ, அல்லது ஜெபிக்கும் மற்றவர்களுக்கும் இந்த வார்த்தைகளை கொடுக்க விரும்பினாலோ கீழ்க்காணும் எங்கள் தொடர்பு எண்களில் உங்களுக்குச் சமீபமான எண்ணுக்கு மிஸ்டு கால் செய்யுங்கள். எங்கள் ஊழியர்கள் சில மணிநேரங்களில் உங்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு உதவி செய்வார்கள். இது போன்ற இன்னும் பிற ஜெபிக்கப்பட வேண்டிய தீர்க்கதரிசனகைப்பிரதிகளும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.


| இராமநாதபுரம் | சென்னை | மதுரை | பெங்களூர் |
|---|---|---|---|
| 9788404222 | 9600001844 | 9488987770 | 8095772333 |

Email: propagators@vojmedia.com

**PROPHETIC PROPAGATORS MISSION**
ASSOCIATED WITH VOICE OF JESUS, RAMANATHAPURAM